ஆண்டுகளுக்குப் பிறகு மறு ஏலம் நடைபெறும். இரண்டாம் ஆண்டு 15 சதவிகிதமும், மூன்றாம் ஆண்டு மேலும் 10 சதவிகிதமும் அதிகமாக வைத்து ஏலதாரர்களுக்கு வழங்கப்படும். இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு யாரும் வராமல் இருப்பார்களேயானால், அந்தக் கடைகள் அநேகமாக, பெரும்பாலும் கூட்டுறவு சொசைட்டிகளுக்குத்தான் இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 582, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

582—

கல்லூரிக்குக் கட்டடம்

***26696**—**திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் இயங்கிவரும் அரசுக் கலைக் கல்லூரி, அரசு மேல்நிலைப் பள்ளியில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கல்லூரிக்குக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

திரு. உ. திசைவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இளைஞனுக்குக் கல்லூரி வாழ்க்கை என்பது ஒரு இன்றியமையாத கட்டமாகும். ஆனால், பரமக்குடியில் இயங்குகின்ற அந்தக் கல்லூரியானது, ஒரு பள்ளி வளாகத்திலே இயங்குகிறது. அதே பள்ளியில் படித்துவிட்டு, அதே பள்ளியிலே உள்ள கல்லூரியில் படிக்கின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தாலே, மாணவர்கள் கல்லூரியில் படிக்கின்ற உணர்வே இல்லாமல் இருக்கின்றனர். இவற்றையெல்லாம் புரிந்து, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நமது மாண்புமிகு கல்வித்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2000 மே 11]

துறை அமைச்சர் அவர்களும், கருணையோடு அந்தக் கல்லூரிக்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக அறிவித்திருப்பதற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவு மதிப்பீட்டில் அந்தக் கட்டடம் கட்டப்படும்? ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டனவா? அந்தப் பணிகளை விரைவாக முடிக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக அந்தக் கல்லூரி இயங்கி வருகிற பள்ளி இருக்கிற இடத்திலேயிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் அதற்கான இடம் ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, கட்டடங்கள் கட்டுவதற்கு அரசின் சார்பில் 215.6 இலட்சங்களுக்கு—2 கோடி ரூபாய் 15 இலட்சம் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வரைபட அடிப்படையில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, அந்தக் கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்தங்கள், கட்டட ஒப்பந்தங்களைப் பற்றி இறுதியாக முடிவு செய்கின்ற Tender Award Committee-யின் முன்னிலையில் முடிவு செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளன. அந்தக் குழுவின் முடிவு தெரிவிக்கப்பட்டவுடன் அந்த ஒப்பந்ததாரர் மூலம் கட்டடப் பணிகள் தொடங்கி, நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 583, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

583—

நூலகத்திற்குக் கட்டடம்

***31711—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகரிலுள்ள பொது நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?